பருத்தித்துறை பிரதேசசபை
யாழ்ப்பாண மாவட்டம்

---------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 26 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பருத்தித்துறை பிரதேசசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

i. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், வருமானங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | சொத்துக்கள் | | வருமானங்கள் | | பொறுப்பக்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப் பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 01 | 54இ950 | | | | |
| அதிகரித்துக் கூறல்கள் | - | - | 01 | 1இ147இ750 | - | 239இ628 |
| | | | | | 02 | |
| விடுபாடுகள் | 01 | 26இ550 | - | - | | - |

ii. நன்கொடையாக கிடைக்கப்பட்ட 13 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்படாமையால் மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் பெறுமதி கணக்குகளில் குறைத்து கணக்கிடப்பட்டுள்ளது.

1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

அ. பிரதான பேரேட்டின் பிரகாரம் மூன்று கணக்கு விடயங்களின் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 4இ019இ737 ஆக இருந்ததுடன் இறுதிக் கணக்குகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 47இ647இ583 ஆக இருந்தது.

ஆ. பதவியினர் கடன்

பதவியினர் கடன் பதிவேட்டில் காணப்பட்ட நான்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 314இ375 இறுதிக் கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

1.3.3 இணக்கமின்மைகள்.

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| <u>சட்டங்கள் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு</u> | <u>விபரம்</u> |
| --- | --- |
| 1988ம் ஆண்டின் நிதிநிர்வாக ஒழுங்கு விதி | |
| அத்தியாயம் ஏ பிரிவு 158(ை) | மீளாய்வாண்டிறுதியில் ரூபா 798,670 ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு செயலாளரினால் ஆணைச்சீட்டு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| அத்தியாயம் ஏ பிரிவு 140 | உரிய திகதியில் ரூபா 3,785,005 முற்பணம் செலுத்தத் தவறும்போது செயலாளரால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரிவு 132 (ஏ) | ஏதாவது ஆண்டொன்றில் ரூபா 1,000 இனை விஞ்சும் களியாட்ட பொழுது போக்கு செலவினங்களுக்கு அமைச்சரின் முன் அனுமதி பெறப்பட வேண்டிய போதிலும் உபசரணை மற்றும் பரிசுப் பொருள் கொள்வனவு செலவீனம் ரூபா 30,515 இற்கு முன் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி<br>நிதி ஒழுங்கு விதி - 571 | 1991 – 2010 காலப்பகுதிக்குரிய காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 2இ885இ751 நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| அரசாற்க நிர்வாக சுற்றறிக்கை இல. 12.∵.2000(ஐ) | சுற்றிக்கையின் பிரகாரம் செய்முறைப் பயிற்சிக்கான பயிலுனர்களுக்கு கொடுப்பனவாக நாளாந்தம் ரூபா 500 படியானது வழங்க வேண்டும் என்பதற்கு முரணாக தொழில்நுட்பக் கல்லூரி பயிலுநருக்கு 2013 மே – ஜுன் வரையான கொடுப்பனவாக நாளாந்தம் ரூபா 300 வழங்கப்பட்டமையால் ரூபா 39,900 குறைவாக வழங்கப்பட்டுள்ளது. |

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 42இ630இ490 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 88இ098 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன்

ஒப்பிடும் போது மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 873இ359 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

---------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 11இ158இ955 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 3இ598இ470 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

----------------------------

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

---------------------------------------------------------------------------------------------------------------

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ‘000 | ‘000 | ‘000 |
| i. இறைகளும் வரிகளும் | 57 | 119 | 799 |
| ii. குத்தகை வாடகைகள் | 3இ429 | 4இ318 | 270 |
| iii. அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4இ773 | 3இ231 | - |
| iv. வேறு வருமானங்கள் | 27இ925 | 39இ675 | 58இ327 |

2.3.2 நீதிமன்றத் தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும்

-----------------------------------------------------------------------------------

i. மீளாய்வாண்டிற்கு முன்னைய காலங்களுக்கான பருத்தித்துறை நீதவான் நீதிமன்றிலிருந்து பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும் ரூபா 4இ230இ933 நிதிக் கூற்றுக்களின் வருமானமாகவும்

வருமதியாகவும் கணக்கிடப்பட்டதேயன்றி அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. மீளாய்வாண்டிற்கான நீதிமன்ற தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும் ரூபா 2,795,200 இற்கான பட்டியல் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றிலிருந்து பெறப்பட்டதேயன்றி அறிக்கையிடும் திகதிவரையும் குற்றப்பணங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

2.3.3 வருமான நிலுவை
-----------------------------

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் ரூபா 1இ069இ166 பெறுமதியான வீதவரி, வாடகை மற்றும் குத்தகை நிலுவைகள் தொடர்பில் ஆக்கபூர்வமான சட்ட நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும் வருமதி நிலுவையாக கணக்கிடப்படுகிறது.

2.4 வருடாந்த இருப்பு கணிப்புச் சபை அறிக்கை குறைபாடு
-----------------------------------------------------------------------------------

i. 2012ம் ஆண்டுக்கான இருப்புக் கணிப்பீட்டுச்சபை அறிக்கையின் பிரகாரம் சபையின் இருப்பு பேரேட்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டபோது 17 எண்ணிக்கையான் பொருட்கள் பற்றாக்குறையாக காணப்படுகிறது.

ii. நான்கு பொருட்கள் யாழ்ப்பாணம் அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாக கணிப்பீட்டு சபை அறிக்கையில் குறிப்பிடப்பட்டபோதும் அவற்றை ஒப்படைத்தமைக்கான ஆவணங்களோ அல்லது கடிதங்களோ கோவையிலிடப்பட்டிருக்கவில்லை.

2.5 சொத்து முகாமைத்துவம்
---------------------------------------

2.5.1 வாகனப் பயன்பாடு
------------------------------

i. மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்து ஐந்து வாகனங்கள் பழுதடைந்து பயன்பாடின்றி வாகன தரிப்பிடத்தில் காணப்படுகின்றது.

ii. மூன்று வாகனங்கள் மானி வாசிப்பு பழுதடைந்த நிலையில் காணப்படுவதினால் கிலோ மீற்றருக்கான எரிபொருள் பயன்பாட்டினை அறியமுடியாதுள்ளது.

iii. மீளாய்வாண்டில் விபத்துக்குள்ளாகிய றீடுபு 8974 ம் இலக்க ிஉைம ரி வாகனம் தொடர்பில் வடக்கு மாகாணசபை நிதி ஒழுங்குவிதி அத்தியாயம் 2 பிரிவு 69ம்

69(1) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு விபத்துக்குள்ளான விடயம் அறிவிக்கப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் நிதிப்பிரமானத்திற்கு முரணாக அறிக்கையிடும் திகதி வரையும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

2.6 ஒப்பந்த நிர்வாகம்

2.6.1 அங்கீகரிக்கப்படாத மூலதன வேலைகள்

மீளாய்வாண்டில் சபையின் வரவு செலவுத் திட்டத்தினால் அங்கீகரிக்கப்படாத ரூபா 1,113,045 பெறுமதியான வேலைத்திட்டங்கள் சபை நிதியில் மேற்கொள்ளப்பட்டிருப்பது அங்கீகாரமற்ற மூலதன வேலைத் திட்டமாக அவதானிக்கப்பட்டுள்ளது.

2.6.2 நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 16.4 மில்லியன் பெறுமதியான 9 வேலைத்திட்டங்கள் மீளாய்வாண்டில் நடைமுறைப் படுத்தப்படாதுள்ளமை கிராம மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் பெற முடியாதுள்ளமையை காட்டுகிறது.

2.7 செயற்பாடுகளின் செயற்திறமையின்மை

2008 – 2010ம் ஆண்டு காலப்பகுதிகளில் உள்;ராட்சி ஆணையாளரினால் சனசமூக நிலையங்களுக்காக வழங்கப்பட்ட நன்கொடைகள் ரூபா 336இ000 உரிய சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படாது நானாவித வைப்பு கணக்குகளில் உள்ளடக்கப்படுவது சனசமூக நிலைய நன்கொடை மீதியின் செயற்பாடற்ற தன்மையினை காட்டுகிறது.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாடுகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வருமானசேகரிப்பு
ii. நிலையான சொத்துக்கள்
iii. வாகனப் பயன்பாடு
iv. வரவு செலவுத் திட்டம்
v. நானாவித வைப்புக்கள்
vi. கடன் பதிவேடு இணக்கம் செய்தல்